பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

பொது சன நூலகம்
29 NOV 1996
பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
பொது சன நூலகம்
29 NOV 1996

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை (29-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 3

# வடக்குத் தேர்தல்கள் குறித்து தமிழ்க் கட்சிகள் முடிவில்லை!

## உடன் தீர்மானிக்க முடியாத நிலை

கொழும்பு, நவம்பர் 29

வடமாகாணத்தில் அரசு நடத்தப்போவதாக அறிவித்துள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பங்கு கொண்டு போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்துத் தமிழ்க் கட்சிகள் எதுவும் இதுவரை உத்தியோக பூர்வமாக முடிவு செய்யவில்லை.

வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்துவது என்ற அரசின் திடீர் அறிவிப்பு வந்ததால், அது குறித்து எதிர்பார்க்கவில்லை ஆதலால், தமிழ்க் கட்சிகள் அதில் போட்டியிடுவது குறித்து உடனடியாகத் தீர்மானிக்கும் நிலையில் இல்லை என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இத்தேர்தல் குறித்து கருத்து வெளியிடுவதற்குக் கூட அக்கட்சிகள் தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர். எல்.எவ்.) உத்தேச தேர்தலில் போட்டியிட விருப்பம் கொண்டுள்ளதாக யு. என். ஐ. செய்தி நிறுவனம் நேற்றுத் தகவல் வெளியிட்டது. எனினும் விளக்கமான அறிவிப்புகள் எதுவும் இல்லை.

இதே வேளை, ஈ.பி.டி.பி. அமைப்பு இந்தத் தேர்தல் குறித்து கருத்து எதையும் நேற்று வெளியிட வில்லை.

தற்போது அமெரிக்காவில் உள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் இத்தேர்தல் அறிவிப்புக் குறித்து அவரது கொழும்பு அலுவலகம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் —

அந்தக் கட்சியின் நிலைப்பாடு அனேகமாக இன்று வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் — தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பங்குபற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண்பதே அரசின் நோக்கம்

### பி. பி. சிக்கு சந்திரிகா பேட்டி

"இனப்பிரச்சினைக்கு நிலையான ஒரு தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நோக்கம். இதன் அடிப்படையிலேயே தீர்வுத் திட்டத்தை முன் வைத்துள்ளோம்"

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தும் சாத்தியத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்தது குறித்தும் ஜனாதிபதி தமது பேட்டியில் கருத்து வெளியிட்டார்.

"நாங்கள் இதை எதிர்பார்த்தோம். சமாதானம் குறித்த தமது உளப்பாட்டை அவர்கள் வெளியிட்டுள்ளனர்" என்று சந்திரிகா பதில் அளித்தார்.

பிரான்ஸில் விடுதலைப் புலிகள் ஆயுதம் மற்றும் நிதி சேகரிப்பது குறித்து தாம் பிரான்ஸில் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் அவர் கூறினார்.

## சுவிஸிலிருந்து டக்ளஸ் பீரிஸ் விரைவில் நாடு கடத்தல்!

### அரசியல்தஞ்ச கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, நவ. 29

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரிய பொலீஸ் அதிகாரி டக்ளஸ் பீரிஸ் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளார்.

இவரது அரசியல் தஞ்சக் கோரிக்கையை சுவிஸ் அரசு நிராகரித்து விட்டது.

பட்டலந்த சித்திரவதைக் கூடம், ஆள் கடத்தல், மரணம் விளைவித்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுடன் சம்பந்தப்பட்டவர் எனக் கூறப்படும் டக்ளஸ் பீரிஸ் பட்டலந்த ஆணைக் குழு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே போலி ஆவணங்கள், போலி கடவுச் சீட்டு ஆகியவற்றின் உதவியுடன் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருந்தார்.

சுவிட்சர்லாந்துக்கு தப்பிச் சென்ற அவர், இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் மீறப்படுவதாகவும் —

மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் — கூறி அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்.

இலங்கையில் மனித உரிமைகள், சட்டம் ஒழுங்குகள் மீறப்பட்டதுக்கு முக்கிய காரணகர்த்தா டக்ளஸ் பீரிஸ் தான் என்பதை இலங்கை அரசு சுவிஸ் அரசுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்தே, அவரின் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (இ)

### முச்சந்தி முரளி



[illegible] திரும்பி வாரார் என்டு [illegible]…….!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டு வீச்சில் ஒருவர் பலி

புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில் சிவபாதலிங்கம் பங்கயற்செல்வன் என்பவர் கொல்லப்பட்டார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

அதேவேளை — முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. (இ-3-150)

## தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடத்தப் படவிருக்கும் மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைத் தேர்தல்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்குள் அந்தந்தத் தேர்தல் அதிகாரியிடம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் காமினி திஸாநாயக்க தெரிவித்தார்.

தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றோருக்கான விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல்களும் சகல அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை நிரப்பப்பட்டு 7 ஆம் திகதிக்குள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் அலுவலரிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## திரேஸா நிலைமை கவலைக்கிடம்

கல்கத்தா மருத்துவமனையில் அன்னை திரேஸாவுக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவர்கள் அவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

## குப்பைத்தொட்டிக்குள் 50 கலிபர் ரவைகள்

### பிலியந்தலவில் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, நவ. 29

விமானத்தைத் தாக்கப் பயன்படுத்தப்படும் 50 கலிபர் ரவைகள் பிலியந்தலவில் உள்ள குப்பைத்தொட்டியில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பிலியந்தல வணிகசூரிய மாவத்தையில் உள்ள குப்பைத் தொட்டியிலே சிமெந்துப்பை ஒன்றில் இருந்து 50 கலிபர் ரவைகளும் மற்றும் சில ரவைகளும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

50 கலிபர் ரவைகள்— 11, எல். எம். ஜி. ரவைகள்—34, ரி 56 ரக ரவைகள்— 33 ஆகியன அந்தச் சிமெந்துப் பையில் இருந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-150)

## மட்டக்களப்பு பகுதியில் பாடசாலை பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு, நவ. 29

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் நேற்று முன்தினம் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர் என அரசு சார்புப் பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

கடந்த திங்கட்கிழமை கிரானில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றையடுத்து பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் தாக்கப்பட்டதைக் கண்டித்தே இப்பகிஷ்கரிப்பு இடம் பெற்றதாக மேலும் குறிப்பிட்டிருந்தது. (இ-3)

## 1000ரூபா கள்ளநோட்டு மூவர் விளக்க மறியலில்

கொழும்பு, நவ. 29

ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களையும் காலவரையறையின்றி விளக்க மறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் உத்தரவிட்டார்.

இராமசாமி ஜெகதீஸ்வரன், சுப்பையா ரவிச்சந்திரன், பரம தயாளன் அகிலநாதன் ஆகிய இளைஞர்கள் கள்ள ஆயிரம் ரூபா நோட்டுக்களைப் புழக்கத்தில் விட முயன்றபோது கைதாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள அகிலநாதனின் வீட்டில் இருந்த 81 கள்ள ஆயிரம் ரூபா நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இவரின் தகப்பன் இந்தியாவில் இருந்து இந்தக் கள்ள நோட்டுக்களைக் கொண்டு வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

**APPLICATIONS FOR ( A/ L 98 )**

**ST. PATRICK'S COLLEGE**

Students of A/L '98 batch may apply for all four streams: Maths, Science, Arts and Commerce. Last date for sending in applications is **05-12-96**.

**- Rector**

(C/3632)



உ

விராட் விஸ்வப் பிரம்மனே நம

# பட்டமளித்துக் கௌரவிப்பு

பருத்தித்துறை, மாதனை அருள்மிகு காளி அம்மன் தேவஸ்தானத்தில் அண்மையில் நடைபெற்ற கந்தஷஷ்டி விழாவையும், தெய்வானை திருமணத்தையும் சிறப்புற நடத்திய



பிரதமகுரு

**தானு - வாசுதேவக் குருக்களின்**

சமய கிரியைகளைப் பாராட்டி, ஆலய பிரதமகுரு, பரிபாலன சபை, அவ்வூர் கிராம மக்கள் ஒன்றிணைந்து கடந்த **24 - 11 - 96** ஆம் திகதி குமாராலய தீபத் திருநாளின் போது

**"கானப்பிரியன்"**

என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளதுடன் குரு அருளாசியும் பெற்று மகிழ்வடைந்தனர்.

சுபம்!

குரு அருளாசி வேண்டி நிற்கும்,
பரிபாலன சபையினர்
காளி கோயில்,
மாதனை.

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ சி. சுரேஷ்வரசர்மா
பிரதகுமரு
காளி கோயில்,
மாதனை.

(43847)


# சித்த ஆயுள்வேத பயிற்சி கருத்தரங்கு

நவாலி, நவ. 29

யாழ். மாவட்டத்திலுள்ள சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கான ஆரம்ப சுகாதார நலம் பேணல் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு டிசம்பர் மாதம் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் நடத்தப்படும்.

இதன் பிரகாரம் அரச சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கு 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளிலும் —

தனியார் வைத்தியர்களுக்கு 26 ஆம், 27 ஆம் திகதிகளிலும் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படும்.

(இ-100)

# பண்டிகை முற்பணம் ரூ.3,000

நவாலி, நவ. 29

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முற்பணம் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணமாக தற்போது ஆயிரத்து 500 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

ஜனவரி முதல் புதிய சம்பள அதிகரிப்பை தொடர்ந்து இப்பண்டிகை முற்பணத்தையும் இரட்டிப்பாக அதிகரிப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ-100)


## தேவை

ரியூட்டறிக்கான வாங்கு மேசை வாடகைக்கு ஆனாலும் சரி விலைக்கு ஆனாலும் சரி உடன் தொடர்பு கொள்க.

**கணபதி களஞ்சியம்,**
பலாலி வீதி,
உரும்பிராய்.

(43855)



வல்லிபுர ஆழ்வார் துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம் கார்த்திகைத் திங்கள் பதினைந்தாம் நாள் (**30—11—1996**) சனிக்கிழமை மு. ப. **11.15—12.45** வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**ரவீந்திரன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், திருகோணமலை)
அவர்களுக்கும்



எமது புதல்வி
திருநிறை செல்வி
**தனேஸ்வரி**
(விரிவுரையாளர், முகாமைத்துவத் துறை, யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் திருமணம் நடத்த திருவருள் பாலித்துள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி இ. விநாயகமும்
குடும்பத்தினரும்,
''ராணி இல்லம்''
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

திரு. திருமதி பொன்னையாவும்
குடும்பத்தினரும்,
''தேவி அகம்''
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

இருவீட்டார் அழைப்பு

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை)



(43848)


# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு தருமலிங்கம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த சின்னப்பு தருமலிங்கம் 25-11-96 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் இராசமணியின் அன்புக் கணவரும், சிவகுமாரன் (ஆசிரியர், சந்திரோதய வித்தியாலயம், உரும்பிராய்), காலஞ்சென்ற ஜெயகுமார் மற்றும் செல்வகுமார் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், நளாயினி, சோமரஞ்சினி ஆகியோரின் மாமனருமாவார், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. தெட்சணாமூர்த்தி.
(சகலன்)

இணுவில் மேற்கு,
இணுவில்.

[43838]

## திருமதி அன்னம்மா தம்பிஐயா

அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா தம்பிஐயா 27-11-96 புதன் கிழமையன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை - காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ச. தம்பிஐயாவின் அன்பு மனைவியும், திருமதி இந்துமதி பரமானந்தத்தின் (ஆசிரியை) அன்புத்தாயாரும், ந. பரமானந்தத்தின் (அதிபர்) அன்பு மாமியாரும், குபேரன், குமணன், மேனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாபாரிமூலையில் 28-11-96 (வியாழக்கிழமை) நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி இந்துமதி பரமானந்தம்
(மகள்)

இராவளை,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(43854)

## ஐயம்பிள்ளை இராஜேந்திரம்

(முகாமையாளர் - சிங்கர் மெசின் கம்பனி, சுன்னாகம்)

நல்லூரைச் சேர்ந்தவரும், சுன்னாகம் சிங்கர் மெசின் கம்பனி முகாமையாளருமாகிய ஐயம்பிள்ளை இராஜேந்திரம் நேற்று (28-11-96) காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பராணியின் (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், சுகிர்தா, சதீஸ்கண்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும், மல்லிகாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற மகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைராசாவின் (பிரான்ஸ்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 541, பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாளை (30-11-96) சனிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் திருநெல்வேலி செம்பாடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புஸ்பராணி இராஜேந்திரம்
(மனைவி)

(43853)

## தாவீது செல்லத்துரை

கோப்பாயைச் சேர்ந்த தாவீது செல்லத்துரை காலமானார்.

இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், சந்திரராசாவின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், துரை-ராணி, றோஸ்மேரி, அழகராசா, யூஜின், வீஜிலோ, ரஞ்சினி, பிரபு, இம்மானுவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கபிரியேல் பிள்ளை மற்றும் அன்னரத்தினம், பூபதி, றோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-11-96) நண்பகல் 12 - 00 மணிக்கு நல்லடக்கத்திற்காக சென் மேரிஸ் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருஞானம்

ஆதித்தன் வளவு,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(43852)

## செல்வி தியாகராஜா சிவந்தினி

(கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய க. பொ. த சாதாரண தர மாணவி — 1995)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மாங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்வி தியாகராஜா சிவந்தினி 15 - 11 - 1996 இல் காலமானார்.

இவர் தியாகராஜா-சந்திரமலர் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவகுமார் (யா/ தொழில் நுட்பக் கல்லூரி, N. C. P. S), சிவதர்சினி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி 1995 A/L மாணவி), சுதர்சன் (யாழ்/மத்திய கல்லூரி, ஆண்டு 9 மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற திருமதி த. செல்லம்மா, தம்பிராசா அவர்களின் பேர்த்தியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
இ. குணசீலன்
(சித்தப்பா)

வேளாதோப்பு,
புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

(43851)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குக் கரையை இஸ்ரேல் ஒரு போதும் கைவிடமாட்டாது

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

டெல் அவில் நவ. 29

மேற்குக்கரைப் பிரதேசத்தில் யூதர்களின் குடியிருப்பு வசதிகளை இஸ்ரேல் மேலும் விஸ்தரிக்கும் என்றும் — அந்தப் பிரதேசத்தை விட்டு இஸ்ரேல் ஒரு போதும் விலகிச் செல்லாது என்றும் — இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தானியாகு தெரிவித்துள்ளார்.

அந்தக் குடியிருப்புப் பகுதிகளை இஸ்ரேல் பிரதமர் கடந்த திங்கள் சென்று பார்வையிட்டார்.

யூதர்களின் குடியிருப்பு வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என பலஸ்தீன அதிகாரிகள் விடுத்தகோரிக்கை— இத்தகைய குடியிருப்புப் பகுதிகளின் பெருக்கம் பேச்சு வார்த்தைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என எகிப்து விடுத்துள்ள எச்சரிக்கை — வெளியான மறுநாளன்று நத்தானியாகு அந்தப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டார்– (இ-10)

# நரசிம்மராவை அடையாளம் காட்டினார் லகுபாய் பாதக்!

புதுடில்லி, நவ. 29

ஒரு இலட்சம் டொலர் இலஞ்சம் பெற்றதாக முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், சந்திரா சுவாமி, அகர்வால் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கில் முறைப்பாடு சொடுத்தவரான லகுபாய் பாதக் குற்றஞ் சுமத்தப்பட்டவர்களுள் ஒருவரான நரசிம்மராவை நீதிமன்றில் வைத்து அடையாளம் காட்டினார்.

நீதிபதியின் உத்தரவுக்கிணங்க ஏனைய சந்தேக நபர்களும் அவரால் அடையாளம் காட்டப்பட்டனர்.

நியூயோர்க் ஹோட்டல் ஒன்றில் நரசிம்மராவைச் சந்தித்தது பற்றி லகுபாய் பாதக் சாட்சியமளிக்கையிலேயே நீதிபதி அவரை அடையாளம் காட்டுமாறு கோரினார்.

ஊனமடைந்துள்ள பாதக் தனது சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு நரசிம்மராவை அடையாளம் காட்டினார்.

நரசிம்மராவ் வெளிவிவகார அமைச்சராக இருந்த போது அவர் அளித்த வாக்குறுதியை அடுத்தே சந்திரா சுவாமிக்கு தான் ஒரு இலட்சம் டொலரை அளித்ததாக லகுபாய் பாதக் சாட்சியத்தில் தெரிவித்தார். (இ-10)

# ராவை ராஜினாமாச் செய்ய கருணாகரன் கோரிக்கை

சென்னை, நவ. 29

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் பதவியில் இருந்து திரு. பி.வி. நரசிம்மராவ் இராஜினாமாச் செய்ய வேண்டுமென்று மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. கே. கருணாகரன் கேட்டுள்ளார்.

திரு. ராவ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகியதற்குக் கூறிய அதே காரணங்களின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் விலக வேண்டும் என்றும் திரு. கருணாகரன் புதுடில்லியில் கூறியதாக பி.ரி.ஐ. தெரிவிக்கிறது. (3-4)

# உலக அரங்கில்

## தடை தளர்வு

1991 இல் இடம்பெற்ற வளைகுடாப் போருக்குப் பின் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த ஈராக் சுமார் 750 கோடி டொலர் பெறுமதியான எண்ணெயை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் ஏற்றுமதி செய்து, அதன்மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்ய ஐ. நா. பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கி உள்ளது.

ஈராக் மக்களின் நலன் குறித்து எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தை குவைத் வரவேற்றுள்ளது.

# மகாத்மா காந்தியின் அஸ்தியை பேரனிடம் ஒப்படைக்க உத்தரவு

புதுடில்லி, நவம்பர் 29

1948 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட மகாத்மா காந்தியின் அஸ்தியை அவரின் பேரனிடம் வழங்குமாறு இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் அஸ்தி ஒரு சிறு மரப்பெட்டியில் இடப்பட்டு சீல் செய்யப்பட்டு ஒரிஸா மாநிலத்தின் கட்டாக்கில் உள்ள 'ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா'வில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

அஸ்தியைப் பெற்று அதனைக் கங்கை நதியில் கரைத்து விடவேண்டும் என மாநில அரசினை மகாத்மா காந்தியின் பேரன் துஷார் அருண் காந்தி கேட்டுவந்தார். எனினும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

அஸ்தியைப் பெற துஷார் அருண் காந்தி இந்திய உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் அதற்கான அனுமதியை தற்போது வழங்கி உள்ளது. (இ-10)

# பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் காலிதா ஷியா மீது ஊழல் குற்றம்

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் காலிதா ஷியாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் முறைகேடுகள், அதிகாரத் துஷ்ப்பிரயோகம் போன்ற குற்றச் சாட்டுகளை அந்த நாட்டின் லஞ்ச லாவண்ய முறைகேடுகள் பற்றி புலன் விசாரணை செய்யும் அமைப்பு தயாரித்துள்ளது.

காலிதா ஷியா தனது சொந்த வீட்டை அழகுபடுத்த அரசுப் பணத்தைப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

உடந்தையாக இருந்து செயல்பட்டதாக காலிதா ஷியாவின் அந்தரங்கச் செயலர் மீதும் வேறு ஒன்பது அரசப் பொறியியலாளர்கள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-10)

# சிந்து நதி ஒப்பந்தத்துக்கு பாருக் அப்துல்லா கடும் எதிர்ப்பு

ஸ்ரீநகர், நவ. 29

பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் வள ஒப்பந்தம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் நலன்களுக்கு எதிராக அமைந்துள்ளது என ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்..

இந்த ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற யோசனையை ஆதரித்துப் பேசிய பாரூக் அப்துல்லா, தண்ணீர் தட்டுப்பாடு தொடர்பாக இந்த ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காரணமாக ஜம்மு காஷ்மீர் மாநிலம் இந்த ஆற்று நீர் வள வாய்ப்புக்களை முழுமையான அளவுக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகக் கூறினார். [இ-10]

## கௌரவம்

அல்பேனியா, நவ. 29

அன்னை திரேஸாவுக்கு அல்பேனியா நாட்டுத் தேசிய விருது வழங்கப்படவுள்ளதாக அந்த நாட்டு வானொலி அறிவித்தது. (இ-10)

# பாதுகாப்பு அமைச்சர் பதவியேற்பு இல்லை

கொழும்பு, நவ. 29

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஜனாதிபதி சந்திரிகாவுக்குப் பதிலாக— அவர் வெளிநாடு சென்றுள்ள வேளை — பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்கவில்லையாம்.

இது குறித்து அரசியல் வட்டாரங்களில் பலவாறாகப் பேசப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இம்மாதம் 25 ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாரிஸ் பயணமானார்.

அதனைத் தொடர்ந்து அவரது பொறுப்பில் உள்ள அமைச்சுகளுக்கான பதில் அமைச்சர்களாக பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, சுனித்தா ஜெயசேன ஆகியோர் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு விட்டனர்.

ஆனால் ஜெனரல் ரத்வத்த மட்டும் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்யவில்லை.

முன்னர் ஒரு தடவையும் சந்திரிகா வெளிநாடு சென்றிருந்த போது ஜெனரல் அனுருத்த ரத்வத்த பிரதமர்முன் சத்தியப்பிரமாணம் செய்வதைத் தவிர்த்து சமாதான நீதிவான் ஒருவர் முன்னிலையிலேயே அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்திருந்தார்.

அனுரா பண்டாரநாயக்கா பிறந்தபோது ஆஸ்பத்திரியில் மாறுப்பட்டார் என்று அனுரத்த ரத்வத்த கூறியதாக வெளிவந்த தகவல்களைத் தொடர்ந்து—

பிரதமர் சிறிமாவோ காரசாரமான கடிதம் ஒன்றை ஜெனரல் அனுருத்தவுக்கு எழுதியிருந்தார்.

அதன் பின்னர் சிறிமாவோ—அனுருத்த உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. (அ-3)

## பரீட்சை அனுமதிப் பத்திரங்கள்

அடுத்த மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் புதனன்று யாழ்.கல்வி வலயம் ஒன்றுக்கு எடுத்துவரப்பட்டன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதிப் பத்திரங்கள் அன்றே தபாலில் சேர்க்கப்பட்டதாக கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சைக்குரிய காகிதாதிகளும் வந்து சேர்ந்துள்ளன.

## கரை ஒதுங்கிய சடலம்

செம்பியன்பற்று நவ 29

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று காலை 10மணிக்கு தலை வெட்டுண்டு மிகவும் உருக்குலைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது.

இச்சடலத்தை ஊர் மக்கள் அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணியளவில் மாமுனை பொது மயானத்தில் புதைத்தனர்.

# முல்லை. முகாம் படையினர் எவரும் புலிகளின் பாதுகாப்பில் இல்லை!

## பாதுகாப்பு அமைச்சிடம் செஞ்சிலுவைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

முல்லைத்தீவு முகாம்தகர்ப்பின் போது பாதுகாப்புப் படையினர் எவரும் விடுதலைப்புலிகளால் சிறைப் பிடிக்கப்படவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பாதுகாப்பு அமைச்சிடம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு முகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு படையினர் பற்றிய விவரத்தைப் பெற்றுத் தருமாறு பாதுகாப்பு அமைச்சு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கேட்டிருந்தது.

இதனை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு விடுதலைப்புலிகளிடம் தொடர்பு கொண்டது.

முல்லைத்தீவில் தாம் படையினர் எவரையும் கைதுசெய்யவில்லை என்றும்- ஏற்கனவே பல்வேறு சமயங்களில் கைது செய்யப்பட்ட 46 படையினரே தம்மிடம் உள்ளதாகவும் — செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள படையினரையும், ''ஐரிஸ் மோனா'' கப்பல் சிப்பந்திகளையும் முல்லைத்தீவில் ஒரு மறைவிடத்தில் இம்மாத நடுப்பகுதியில் பார்வையிட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவித்துள்ளது. (இ-3-150)

## சீனிக்கு தட்டுப்பாடு

வடமராட்சி, நவ. 29

வடமராட்சிப் பிரதேசத்தில் சீனிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதே நேரம் பங்கீட்டுக்கு வழங்கப்படும் சீனி [illegible] பங்குகளுக்கு போகாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

# அனுராவின் பாதையில் டயர் எரித்து எதிர்ப்பு

கொழும்பு, நவ. 28

கம்பஹா மாவட்டத்துக்கு கடந்த சனிக்கிழமை ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்கா சென்ற சமயம் அவர் பயணம் செய்த வீதிகளில் டயர்களைப் போட்டு எரித்து எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டது.

கம்பஹா மாவட்டத்தில் உடுகம்பொல — வீதியாவத்தை வீதியால் அனுரா பண்டார நாயக்கா காரில் சென்றுகொண்டிருந்த சமயமே மேற்கண்டவாறு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தின் ஐ.தே.க. அமைப்பாளர் மசீன் குணசேகரா வீட்டில் நடந்த கருத்தரங்கில் அவர் பங்குபற்றினார்.

அங்கு பேசிய அவர்—

''நான் வரும் பாதையில் டயர்களை எரித்த செயலுக்கு ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவரின் செயலாளரே பொறுப்பு''— என்று கூறினார்.

கருத்தரங்கு முடிந்து காரில் அவர் திரும்பும் போது சிலர் சில கதிரைகளை எடுத்து வந்து எரியும் டயரில் போட்டு விட்டுச் சென்றனர்.

கதிரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சின்னம் என்பது தெரிந்ததே. (உ-3-150)

## றுகுணு பல்கலைக்கழகம் திறக்கப்படும்

தற்போது மூடப்பட்டுருக்கும் றுகுணு பல்கலைக்கழகம் மீண்டும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி திறக்கப்படும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகம் மூடப்பட்டதை எதிர்த்தும் மீண்டும் பல்கலைக்கழகம் திறக்கப்படவேண்டும் என்று கோரியும் அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்பாட்டங்களை நடத்தி வந்தது தெரிந்ததே. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Shiram Honda ஜெனரேற்றர் மொடல் நம்பர் E. M. 650 (தனிப்பாவனை) விற்பனைக்கு உண்டு. சு. கனகரெத்தினம், மரக்கறிச்சந்தை, பருத்தித்துறை.

(சி/3626)

### சமூகக்கல்வி

O/L துரித மீட்டல் தொகுப்பு விலை ரூ. 18/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. ஆக்கம் புவனேந்திரன் B. A. Dip-In-Ed 285, பலாலி வீதி, திருநெல்வேலி. (43834)

### இசை வகுப்புகள்

வீணை, வயலின், புல்லாங்குழல், ஓர்கன், மெலோடியன், கிற்றார் போன்ற வகுப்புகள் இடம்பெறும். வாசுகி ரங்கன், நியூ வீணாகானம், இல. 16/2, கச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(43835)

### வாங்கப்படும்

புறோயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகக் கொள்வனவு செய்யப்படும் திருமகள் களஞ்சியம் 418, K. K. S. வீதி, வண்ணை சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(9006)

### "ஆரோக்கிய வாழ்வு"

தொற்று நோய்களிலிருந்து நீங்க விசேட காபோலிக் கலந்த மில்க்வைற் மெடிக் கேற்றற் சோப் பாவியுங்கள். மேலுறைகளுக்கு யோகாசனப் படம் வழங்கப்படும். ''மில்க்வைற்'' (சி/3630)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம். 25 வயது, புனர்பூசம், செவ்வாய் குற்றமற்ற இங்கிலாந்தில் தொழிலுடைய பெண்ணுக்கு இங்கிலாந்தில் தகுதியான மணமகன் தேவை. அத்துடன் பொருத்தமான மணமக்கள் தேர்வுக்கு. இல. 03, யாழ்வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.

(43836)

### O/L கணிதம்

Pass Credit, பெறுபேறடைய 10 நாள்கள் தினமும் 3 மணித்தியாலயம் (Paper Class உட்பட) கற்பிக்கப்படும் ஆசிரியர் இல. 85; சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி - (43845)

## NEW EESAN INSTITUTE

Palaly Road, Urumpiray.

**Spoken English**

WITH

**GRAMMAR**

**Teacher - By: BRITTO**

**ஆரம்பம் - 01-12-96** (ஞாயிறு 11. 00 a. m.)

(43826)

## நோயாளர் கப்பல் சேவை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆதரவில் நடைபெறும் நோயாளர் கப்பல் சேவை புதனன்று வழமைபோல் நடைபெற்றது.

நோயாளர்களும் அவர்களின் உதவியாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து செஞ்சிலுவையால் ஒழுங்கு செய்யப்பட்ட வாகனங்களில் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கிருந்து நோயாளர் கப்பல் திருகோணமலைக்குப் புறப்பட்டது. (அ–15)

## யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

**பழைய மாணவர்களுக்கான**

## அறிவித்தல்

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் 1988 ஆம் ஆண்டும், அதற்கு முன்னரும் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் அனைவரும் 30 - 11 - 96 சனிக்கிழமை காலை 9 . 00 மணிக்கு (பழைய நேரம்), முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட வேண்டியிருப்பதால், தவறாது பாடசாலையில் அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

[43841]

## 1 ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 07 — 07 — 1929

உதிர்வு: 11 — 12 — 1995

## ஸ்ரீமான் தம்பு சேனாதிராயர் (B. Sc.)

(முன்னாள் பிரதி அதிபர், புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி)

பஞ்சணைய மென்மனத்தார் எங்கள் அப்பா
துஞ்சலின்றிக் கண் விழித்துக் காத்தீர் அப்பா
கொஞ்சிமொழி பேசியெம்மை வளர்த்தீர் அப்பா
தஞ்சமெமக் கினியாரென்று சென்றீர் அப்பா!

குடும்பத்தினர்

''செல்லவளவு''
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(43843)

## புலமைப்பரிசில்- 97

அடுத்த பயிற்சிப் பரீட்சை

**8-12-96 ஞாயிறு**

வழமைபோல் நடைபெறும்

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(43840)

## வைத்தியம்

எனது தொய்வு - முட்டு நோயாளர்கள் தங்களது சகல மருந்துகளையும்

டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம்,
இலக்கம் 25,
சென் சில்வெஸ்ரர் றோட்,
மவுண்ட்லேவினியா

என்னும் விலாசத்தில் தற்காலிகமாகத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 730945 (கொழும்பு)

(43778)

## VIBGYOR

### TUITION CENTRE

**10/2, புகையிரத வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

அனுபவமிக்க சிறந்த ஆசிரியர்கள்,
தரமான கல்வி;

| | |
|---|---|
| தமிழ் | — திரு. சிவராஜா |
| விஞ்ஞானம் | — திரு. தயாபரன் |
| கணிதம் | — திரு. அருளானந்தசிவம், திரு. குமரன் |
| வரலாறும் சமூகக்கல்வி | — திரு. தவகுலசிங்கம் |
| ஆங்கிலம் | — திரு. மகேஸ்வரன் |
| வர்த்தகம் | — திரு. உதயன் |

ஆண்டு **5-11** வரையான சகல வகுப்புக்களும் **07-12-96** சனிக்கிழமை பி. ப. **2-00** மணிக்கு ஆரம்பமாகின்றன. அனுமதிக்கு முந்துங்கள். மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

நிர்வாகி

(43752)

உ
சிவமயம்


# திருமணம்



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 15 ஆம் நாள் **(30-11-1996)** சனிக்கிழமை பகல் 11-33 மணி தொடக்கம் 13-22 மணி வரையுள்ள பூச நட்சத்திரமும், துலா இலக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

பருத்தித்துறை
**திரு. திருமதி செல்வராசா**
தம்பதிகளின்
புத்திரன் திருநிறை செல்வன்
**ஜெயராஜா**
**(ஜெயம்)**
அவர்கட்கும்



தீருவில், வல்வெட்டித்துறை
**திரு. திருமதி தங்கராசா**
தம்பதிகளின்
கனிஷ்டபுத்திரி திருநிறை செல்வி
**சந்திரேஸ்வரி**
**(கட்டி)**
அவர்கட்கும்

Grenchen, Alte Turn Halle திருமண மண்டபத்தில் (Linden Str. 24, Grenchen, Solothurn) இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர் (பருத்தித்துறை— இலங்கை வங்கி, மாவட்ட முகாமையாளர் காரியாலயம்]

திரு. திருமதி ஜெகதீஸ்வரன் குடும்பத்தினர் (ஜேர்மனி)

திரு. திருமதி தேவசிகாமணி (M. T. T. மணி) குடும்பத்தினர் (சுவிஸ் 065/ 25 3074)

(இரு வீட்டார் அழைப்பு) [43833]

வலி - கிழக்கு வடபகுதி

## பல நோ. கூ. சங்கம்

**அச்சுவேலி**

## இசுசு லொறிக்குப் பொடி அடிப்பதற்கான கூறுவிலைகள்

சங்கத்தின் 24/9273 லொறிக்குப் பின்வரும் வேலைகளுக்கான கூறுவிலைகள், பாவிக்கப்படவுள்ள பொருள்களுக்கும், கூலிக்கும், தனித்தனியாக, தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எழுத்து மூலமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வேலை விவரம்:-**

1. பொடியடித்தல் (பெயின்ற் அடித்தல், வாணிஸ் பூசுதல் உட்பட)
2. வயறிங் வேலை செய்தல்.
3. ரிங்கர் வேலை.

**நிபந்தனைகள்:-**

1. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.
2. பாவிக்கப்படவுள்ள பொருள்களின் விவரமும் கூலியும் விவரமாக இடம்பெற வேண்டும்.
3. தற்போது லொறி பொடியில் பாவிக்கக் கூடிய பொருள்கள் விவரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 10 - 12 - 96 ஆகும்.
ஒப்பந்த வைப்புப் பணமாக ரூபா 500/ (ஐந்நூறு) செலுத்துதல் வேண்டும்.
விண்ணப்ப படிவம் 10/- செலுத்தி சங்கத்தில் பெறப்படல் வேண்டும்.
(காரியாலய நேரத்தில் லொறியைப் பார்வையிடலாம்).

**பொது முகாமையாளர்**
வலி - கிழக்கு (வ. ப) ப. நோ. கூ. ச.
அச்சுவேலி.

(27 - 11 - 1996) (சி/3629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தால் பெரும் பாதிப்பு!

குடாநாட்டில் கடந்த நான்கு தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாகப் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

குளங்கள், கிணறுகளில் தண்ணீர் மட்டம் பெருமளவு உயர்ந்துள்ளது. வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

வீதிகள் பலவற்றில் வெள்ளம் நிற்பதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

நவாலிப் பகுதியில் சில இடங்களில் தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன.

மழை தொடர்ந்து பெய்யுமானால் வெள்ளத்தால் பெரும் அழிவு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

மழை காரணமாகக் கண்டி வீதியில் பல இடங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வீதிகளில் உள்ள பள்ளங்களில் வெள்ளம் நிற்பதால் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

வடமராட்சியில், பருத்தித்துறையில் பல இடங்களில் வெள்ளம் காரணமாகப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

நகரில் உள்ள வடிகால்கள் உரிய முறையில் சீரமைக்கப்படாததால் நகரின் சில இடங்கள் — குறிப்பாக கல்லூரி வீதிக்கும் விநாயக முதலியார் வீதிக்கும் இடைப்பட்ட வீதி — வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

இதே போன்று மெதடிஸ்த மகளிர் உயர் தரக் கல்லூரிக்கு தற்போது செல்லும் பாதையான விளையாட்டு மைதானத்திலும் பெரும் அளவு வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

சுன்னாகம், கந்தரோடைப் பகுதிகளிலும் சில இடங்களில் நெற் பயிர்கள் நீரில் மூழ்கி அழிந்து போகும் நிலையில் உள்ளன.

(இ-111-173-100-117)

## பொருள்கள் இறக்கவில்லை

கடும் மழை காரணமாக கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படவில்லை.

இதனால் வாதுவ கப்பல் இருதினங்களும் பருத்தித்துறைக்கு வந்து காங்கேசன் துறைக்கு திரும்பிச்சென்றது.

(இ-173)

# உதயன்

## மொழியுரிமை; நீறு பூத்த நெருப்பு

அரசாங்கத் திணைக்களங்களுக்குத் தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப்பட வேண்டும். இது இந்த அரசின் பணிப்பு. பொது நிர்வாக அமைச்சு இதற்கென விசேட சுற்றறிக்கை ஒன்றை அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

தமிழை அரச அலுவல்களில் பயன்படுத்த வகை செய்யும் பொருட்டு, நியாயமான தமிழ் மொழி உபயோகச் சட்டம், விசேட மொழி (தமிழ்) வசதிகள் சட்டம், தமிழும் சிங்களமும் தேசியமொழிகள் என்ற அரசமைப்புச் சட்டத்தின் பத்தொன்பதாவது சரத்து என்று பலசட்ட வசதிகள் கடந்தநாற்பதுவருடங்களாகக் காலத்துக்குக் காலம் அரசுகளால் கொண்டு வரப்பட்டன.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர்கள் அனேகமாக அடிக்கடி, குறைவில்லாமல் சுற்றறிக்கைகள் விட்டதும் உண்டு. வடக்கு — கிழக்கில் கூட தமிழ் நிர்வாக மொழியாகப் பயன் படுத்தப் படாதது ஏன் என்று நாடாளுமன்றத்தில் கேள்விகளும் கேட்கப்பட்டன. அப்போதெல்லாம் [illegible] வசதி செய்யப்படும் என்று பொறுப்பான அமைச்சர்கள் பதில்கள் அளித்தனர்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை தோன்றி அது இன்றைய மோசமான, சீரழிப்பு நிலைக்கு வருவதற்கு மூல காரணியாக இருந்தது மொழிப் பிரச்சினையே. சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்கி, தமிழைப் புறக்கணிக்காதிருந்திருப்பின் நாட்டில் இன்றைய அழிவுகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

மொழிப் பிரச்சினை இப்போது உள்மறைந்து போன விவகாரமாக, அடங்கிவிட்ட போதிலும், அது தீர்க்கப்பட்டு விட்டதாக, தென்னிலங்கை அரசியல்வாதிகள் "டமாரம்" அடித்தாலும் தமிழர்களின் மொழி உரிமை இன்னமும் நடைமுறையில் நிலை நாட்டப்படவில்லை.

மொழியுரிமை தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்பதை மறக்கக்கூடாது.

பொதுமக்களால் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு சிங்களத்தில் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பில் தான் பதில்கள் கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் வாழும் தமிழ் மட்டுமே தெரிந்த பொது மக்களுக்கு தனிச் சிங்களத்திலேயே அரச திணைக்களங்களில் இருந்து கடிதங்கள் வருகின்றன!

தமிழர்களின் மொழி உரிமையை வழங்குவதற்கு தமிழ் தட்டச்சாளர்கள், சுருக்கெழுத்தாளர்களை நியமிக்கவும், தட்டச்சு இயந்திரங்களை வாங்குவதற்கும் அரசுக்கு அக்கறை இல்லை; பணமும் இல்லை. ஆனால் போருக்காக மிக்க ஆர்வத்துடன் கோடி கோடியாகப் பணம் [illegible].

மொழியுரிமை விவகாரம் நாற்பது வருடங்களாக நீறு பூத்த நெருப்பாக இருக்கின்றது. அதிலிருந்து தோன்றிய இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பது எப்படி? மனம் இருந்தாலன்றோ இடமிருக்கும்!

## யாழ். பிரதேச செயலாளர் பிரிவு அடையாள அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். நகர பிரதேச செயலாளர் பிரிவு மக்களின் விசேட அடையாள அட்டைகள் இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் டிசம்பர் 3 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் விநியோகிக்கப்படும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

குடும்ப விவர நிரல் அல்லது உலர் உணவுப் பங்கீட்டு அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்து உரியவர்கள் இவற்றை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

### கொள்ளைகள் தொடர்பாக

## படையிலிருந்து தப்பிய பொலீஸார் உட்பட மூவர் கைதாகினர்!

கொழும்பு, நவ. 29

கொழும்பு, தெற்குப் பகுதியில் இடம்பெற்ற பல கொள்ளைகள் தொடர்பாக படையில் இருந்து தப்பி ஓடிய பொலீஸ் கமாண்டோ ஒருவர் உட்பட மூவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு தெற்குப் பகுதிகளான வெள்ளவத்தை, மஹரகம, தெஹிவளை, ஹொகுவல உட்பட மற்றும் பகுதிகளில் கடந்த நான்கு மாத காலமாக நடந்த பல கொள்ளைச் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்து வந்த பொலீஸார் இவர்களைக் கைது செய்ததுடன் இவர்களால் கொள்ளையிடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர்.

இவர்களால் கொள்ளையிடப்பட்ட 22இலட்சம்ரூபா பெறுமதியான மூன்று சக்கர ஓட்டோ வாகனங்கள், 22 5 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் ஆகியன இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளன.

(இ-3)

## பாதுகாப்பாகத் தங்க இடமின்றி தவிக்கும் கோப்பாய் யுவதி!

### கொழும்பு விடுதிகள் கைவிரிப்பு

கொழும்பு, நவ. 29

டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் நாடுகடத்தப்பட்ட கோப்பாய் யுவதி சித்திரா ராஜேந்திரன், கொழும்பில் பாதுகாப்பாகத் தங்கியிருக்க இடமின்றித் தவிப்பதாக அவரது சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராசா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தற்போது தம்மைப் பொறுப்பேற்ற தமது சகோதரி வசந்தியுடன் அவர் தங்கியுள்ளார்.

பொலீஸாரின் வேண்டுகோளின் பேரில் தமது கணவன் மற்றும் கைக்குழந்தையுடன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வசந்தி பொலீஸார் ஏற்பாடு செய்த விடுதி ஒன்றிலேயே தங்கியுள்ளார்.

சித்திராவைப் பொறுப்பேற்கும் நிலையில் தாம் இல்லை என்று அவர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியரான தமது கணவன், பிள்ளையுடன் யாழ்ப்பாணம் திரும்பவுள்ளார்.

இந்த நிலையில் வெளிநாடு போகும் வரை தமக்குப் புகலிடம் தருமாறு இரட்சண்ய சேனை விடுதி, இந்து மகா சபையால் நடத்தப்படும் பெண்கள் விடுதி, இராமகிருஷ்ண மிசன் ஆகியவற்றை இவர் கேட்ட போதிலும் இவரிடம் உரிய ஆவணங்கள் இல்லாததால் எவரும் இடம் கொடுக்க முன்வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# உறவினர்கள் உண்மையானவரா? இல்லை என்று நிரூபித்தார் குரு!

(ஸ்ரீராம கிருஷ்ணர் தமது சீடர்களுக்கு ஆன்மிக உணர்வை ஊட்டுவதற்காக கருத்துள்ள கதைகளைக் கூறுவது வழக்கம். அத்தகைய கதைகளில் ஒன்று இது)

ஒரு சமயம் குரு ஒருவர் தன்னுடைய சீடனிடம் ''இந்த வாழ்க்கை உண்மையல்ல; நீ என்னுடன் வந்து விடு!'' என்றார்.

அதற்குச் சீடன், ''ஐயா! என் வீட்டில் இருப்பவர்கள் எல்லோரும் என் மீது எவ்வளவு அன்பு செலுத்துகின்றார்கள்! என் தந்தை, தாய், மனைவி ஆகியவர்களை விட்டு விட்டு நான் எப்படி உங்களுடன் வர முடியும்?'' என்று வினவினான்.

அதைக் கேட்ட குரு, ''என்னுடையவர்கள், என்னுடையவர்கள் என்று நீ சொல்கிறாயே, அவர்கள் உண்மையிலேயே உன்னுடையவர்கள் அல்லர். அவர்களைப் பற்றி நீ தவறான கருத்தைக் கொண்டிருக்கின்றாய். நான் உனக்கு ஒரு வழியைக் கற்றுக் கொடுக்கிறேன். அதை நீ செய்து பார். அப்போது உனக்கு உண்மை நன்கு தெரிய வரும் அவர்கள் உண்மையாகவே உன்னிடம் அன்பு கொண்டிருக்கிறார்களா, இல்லையா என்பதை நீயே புரிந்து கொள்வாய்'' என்று கூறி ஒரு குளிகையை சீடனின் கையில் கொடுத்து, ''இதை நீ வீட்டிற்குச் சென்றதும் சாப்பிடு. அதனால் நீ இறந்தவன் போலாகிவிடுவாய். ஆனால் உன் அறிவு மட்டும் தெளிவாக இருக்கும்; எல்லாவற்றையும் உன்னால் கேட்கவும் முடியும். பிறகு மெதுவாக நீ உன் பழைய நிலையை அடைவாய்'' என்றார்.

சீடன், குரு சொன்னபடியே அந்தக் குளிகையைச் சாப்பிட்டான். அதன் காரணமாக அவன் வீட்டில் பிணம் போல் படுத்து விட்டான். வீட்டில் ஒரே அழுகையும் கூச்சலும் எழுந்தன.

அவனுடைய தாய், மனைவி, உற்றார், உறவினர்கள் அனைவரும் ''ஓ'' வென்று கதறி அழுதார்கள்.

அந்தச் சமயத்தில் குரு அங்கு வந்து, ''ஏன் இப்படி அழுகிறீர்கள்? இங்கு என்ன நடந்தது?'' என்று விசாரித்தார்.

அதற்கு அவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில், 'இந்த இளைஞன் இறந்துவிட்டான்!' என்று கூக்குரலிட்டழுதனர்.

### ஞானக்கதிர்

குரு இறந்து கிடக்கும் இளைஞனின் கை நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இவன் இறக்கவில்லை. நான் ஒரு மருந்து கொடுக்கிறேன். அதைச் சாப்பிட்ட உடனே இவன் எழுந்துவிடுவான்!'' என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் வீட்டில் இருப்பவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்; சொர்க்க இன்பமே கிடைத்து விட்டது போல் மகிழ்ந்தனர்.

பிறகு குரு அவர்களைப் பார்த்து, ''ஆனால் ஒரு விஷயம்; இந்த மருந்தை முதலில் உங்களில் யாராவது ஒருவர் சாப்பிட வேண்டும்; பிறகு இங்கு விழுந்துகிடக்கும் இந்த இளைஞனைச் சாப்பிடச்செய்ய வேண்டும். யார் முதலில் இந்த மருந்தைச் சாப்பிடுகிறாரோ அவர் இறந்து விடுவார். இறந்து கிடக்கும் இந்த இளைஞனுக்கு வேண்டியவர்கள் பலர் இங்கு இருக்கின்றீர்கள். உங்களில் யாராவது ஒருவர் இந்த மருந்தைச் சாப்பிடலாம். இவன் இறந்ததற்காக இந்த இளைஞனின் தாயும் மனைவியும் மிகவும் அழுகிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் இந்த மருந்தைச் சாப்பிடலாம்'' என்றார்.

அவர் அவ்விதம் சொன்னதும் அங்கிருந்த எல்லோருடைய அழுகையும் உடனே நின்றது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இளைஞனின் தாய் கூறினாள்: ''நான் இப்போது என்ன செய்வேன்? இதுவோ பெரிய குடும்பம்; நான் போய்விட்டால் யார் இந்தக் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வார்கள்?''

இளைஞனின் மனைவி, ''ஐயோ! எனக்கு எவ்வளவு பெரிய துன்பம் ஏற்பட்டு விட்டது!'' என்று கூறிக் கொண்டே அழுதாள்.

பிறகு அவள், ''ஏதோ நடந்தது நடந்து விட்டது. எனக்கு இப்போது இரண்டு மூன்று சிறு குழந்தைகள் இருக்கிறார்கள். நான் போய் விட்டால் இவர்களை யார் கவனிப்பது?'' என்றாள்.

சீடன் அங்கு நடந்த உரையாடல்களை எல்லாம் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தான். அப்போது அவனுக்குப் பழைய நிலை திரும்பியது. உடனே அவன் எழுந்து நின்று குருவிடம் ''வாருங்கள் போகலாம், நானும் உங்களோடு வருகிறேன்'' என்றான்.

நன்றி; ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.

## நாளை

**கார்த்திகை 15**
**சனிக்கிழமை**
திதி: பஞ்சமி
பிற்பகல் 3.53 வரை.
நட்சத்திரம்: பூசம்
முன் இரவு 8.14 வரை.
ராகுகாலம் : 9.14 - 10.44
[illegible]
([illegible] பழைய நேரப்படி)

## யாழ். மாவட்ட நிலைமை பற்றி மாநாடு

கொழும்பு, நவ. 29

யாழ். மாவட்ட நிலைமை குறித்து பாதுகாப்பு அமைச்சில் உயர்மட்ட மாநாடு ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தை இந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

பிரஸ்தாப மாநாட்டிற்கெனக் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்த யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் உட்பட யாழ். மாவட்டத்தின் முக்கிய பணிகளை மேற்கொண்டுள்ள திணைக்களங்களின் 60 பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பல தரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டதாக அறியவந்தது.

(அ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேலும் சில பாடசாலைகளின் ஜி. சீ. ஈ. பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 2 9

கடந்த ஜூலை மாதம் வடபகுதியில் நடைபெற்ற ஜி. சீ. ஈ, சாதாரண தர விசேட பரீட்சை முடிவுகள் குடாநாட்டின் எல்லாப் பாடசாலைகளிலும் வெளியாகின.

குடாநாட்டுப் பாடசாலைகளில் முன்னர் பயின்று, இடம்பெயர்வு காரணமாக வன்னி மாவட்டங்களில் இருந்து தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இங்குள்ள அவரவர் பாடசாலைகளுக்குக் கிடைத்துள்ளன.

யாழ். நகரப் பாடசாலைகள் சிலவற்றில் அதிவிசேட சித்திகள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியிடப்பட்டன.

நேற்று மாலை வரை மேலும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் எமக்குக் கிடைத்தன. அந்தப் பாடசாலைகளில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

யாழ். நகரம்

★ சென். பற்றிக்ஸ் :- 8 பாடங்களில் — ஒருவர் (எம். எவ். நிரோஷன்), ஏழு பாடங்களில் — ஒருவர்.

★ யாழ். இந்து மகளிர்:- ஆறு பாடங்களில் — இருவர், 5 பாடங்களில் — இருவர்.

★ வேம்படி மகளிர்:- ஏழு பாடங்களில் — 13, ஆறு பாடங்களில் — 27.

★ வைத்தீஸ்வரா:- 3 பாடங்களில் — மூவர்.

★ யாழ். மத்திய கல்லூரி:- ஆறுபாடங்களில் — ஒருவர், ஐந்து பாடங்களில் — மூவர்.

★ கொக்குவில் இந்து:- ஆறு பாடங்களில் — ஒருவர்.

தென்மராட்சி

★ சாவகச்சேரி இந்து:- ஏழு பாடங்களில் — இருவர், ஆறு பாடங்களில் — எழுவர்.

★ சாவகச்சேரி டிறிபேர்க்:- ஐந்து பாடங்களில் — ஒருவர், 4 பாடங்களில் — ஒருவர்.

★ சாவகச்சேரி மகளிர்:- ஐந்து பாடங்களில் — இருவர், 4 பாடங்களில் — மூவர்.

★ மீசாலை வீரசிங்கம் ம. வி.:- இரு பாடங்களில் — ஐவர்.

★ உசன் இராமநாதன் ம. வி. :- மூன்று பாடங்களில் — ஒருவர், இரண்டு பாடங்களில் — ஒருவர்.

வடமராட்சி

★ ஹாட்லி :- 7 பாடங்களில் — மூவர், ஆறு பாடங்களில் — 22 பேர், 5 பாடங்களில் — 18 பேர்.

★ பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் :- 6 பாடங்களில் — ஏழு பேர், 5 பாடங்களில் — மூன்று பேர்.

★ வட. இந்து மகளிர்:- 6 பாடங்களில் — மூவர், 5 பாடங்களில் — நால்வர்.

★ பருத்தித்துறை வேலாயுதம் ம. வி. :- 4 பாடங்களில் — ஒருவர், மூன்று பாடங்களில் — இருவர்.

★ பருத்தித்துறை சித்தி விநாயகர் வி. :- 2 பாடங்களில் — ஒருவர்.

★ புலோலி மெ. மி. பாடசாலை :- 2 பாடங்களில் — நால்வர்.

★ வடமராட்சி மத்திய மகளிர் :- 7 பாடங்களில் — ஒருவர்.

அச்சுவேலி ம. வி. :- 4 பாடங்களில் — ஒருவர்.

★ மல்லாகம் ம. வி. :- 6 பாடங்களில் — மூவர், 5 பாடங்களில் — மூவர்.

★ கைதடி விக்னேஸ்வரா :- 3 பாடங்களில் — இருவர்.

(அ-ரி-3-173-31)

## ஆஸ்திரேலியா - மேற்கிந்திய அணிகள் இன்று மோதும்

சிட்னி, நவ. 29

ஆஸ்திரேலியா, மேற்கு இந்திய அணிகளுக்கு இடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று சிட்னியில் ஆரம்பமாகிறது.

5 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் ஆஸ்திரேலியா அணி 1-0 என்ற வீதத்தில் முன்னணியில் உள்ளது. (இ-10)

## மோசமான நிலையில் இந்தியா

கல்கத்தா, நவ. 29

இந்திய, தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கு இடையே கல்கத்தாவில் நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா 6 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடுவதைத் தவிர்ப்பதற்கு இந்தியா இன்னும் 77 ஓட்டங்களைப் பெறாகவேண்டும்.

2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 339 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றுக் காலை ஆட்டத்தை ஆரம்பித்த தென் ஆபிரிக்க அணி 428 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. வெங்கடேஷ் பிரசாத் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (இ-10)

## நியூசிலாந்து 8 விக்கெட்டுக்கு 215 ஓட்டங்கள்

ராவல்பின்டி, நவ. 29

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்று ஆரம்பித்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நேற்றைய ஆட்ட முடிவின்போது நியூசிலாந்து அணி 8விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. (இ-10)


## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்ட

### அமரர் க. கிருஷ்ணபிள்ளை

அவர்களின் மரணச் செய்தி கேட்டுப் பெரும் துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கு ஆறுதல் கூறுவதோடு அவர் தம் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்.
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(43850)



பாசமிகு தந்தையின்

## 16 ஆம் ஆண்டு நினைவாக



தோற்றம்: 05 — 06 — 1928

மறைவு: 29 — 11 — 1980

### அமரர் கந்தையா செல்லத்துரை

(தலைவர் அ. பொ. சே. தொ. சங்கம்)

பதினாறு ஆண்டுகள் பறந்த தையா
பரிவுடனே எமையழைத்த தலைவா! எங்கள்
இதயத்தில் உங்களது நினைவின் அலைகள்
என்றும் அதே பசுமையுடன் தொடரும் ஐயா!
உதிரத்தை சொரிந்தெம்மை உயர வைத்த
உத்தமரே! தொழிலாளர் உரிமை வேண்டும்
சமர்தனிலே, எமைப்பிரிந்தீர் உங்கள் நினைவின்
தழுவலிலே சாந்தியுற்று அஞ்சலிப்போம்...!

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம். (9007)


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

## அடுத்த ஜனாதிபதி ரணில் என்கிறார் றொனி

கொழும்பு, நவ. 29

''அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காதான். அதை எவராலும் தடுக்க முடியாது''

இப்படி முன்னாள் நிதி அமைச்சரும், மாத்தறை மாவட்ட எம். பியுமான றொனி டி. மெல் தெரிவித்தார்.

தெவிநுவரவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கும் விலை ஏற்றத்துக்கும் காரணமான இந்த அரசாங்கம் நீடித்து நிலைக்காது.

எமது கட்சியைப் பீடித்த கெட்ட காலம் நீங்கிவிட்டது. இன்று இளைஞர்கள் எமது அணியில் சேரத்தயாராகி விட்டனர் என்றும் றொனி டிமெல் கூறினார். (இ-3-150)

## ஷெல் வீச்சுக்கு கிரானில் ஒருவர் பலி

கொழும்பு, நவ. 29

வாழைச்சேனையில் இருந்து கிரானை நோக்கி கடந்த செவ்வாய் இரவு மேற் கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் எஸ். மயில்வாகனம் (60 வயது) என்பவர் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதலையடுத்து கிரானில் இருந்தும், அயல் கிராமங்களில் இருந்தும் மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்றனர். (இ-3-150)

## வடக்குத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் தெரிவித்தன.

இன்றுள்ள சூழலில் அங்கு தேர்தல் நடத்தக் கூடிய நிலை இல்லை. அங்குள்ள மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற நிர்வாக முறை தேவையெனக் கருதினால், அவர்களுக்குள் ஏற்பாடு செய்து தேர்தலில் போட்டியிடலாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

இதே வேளை — தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இ. சம்பந்தன் கூறுகையில் —

தேர்தல் தொடர்பான தகவலை நேற்றுத்தான் அறிந்தேன். கூட்டணியின் அரசியல் விவகாரக்குழு கூடி இது குறித்து ஆராய்ந்து அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு செய்யும் — என்றார்.

இதற்கிடையில் —

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப் போவதாக அரசின் அறிவிப்பு ஒரு 'ஜோக்' என்று யு. என். ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மூன்று தடவைகள் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்தி வைத்துள்ள அரசாங்கம், தற்சமயம் வடக்கில் அந்தத் தேர்தல்களை நடத்தப்போவதாக அறிவித்துள்ளமை ஒரு பகிடியான விடயம் என்று அது விவரித்தது. (அ-3-150)

## முன்னேஸ்வரம் கோயிலில் பிள்ளையார் சிலை திருட்டு!

கொழும்பு, நவ 29

சுமார் 400 வருடம் பழைமை வாய்ந்த ஐம்பொன் பிள்ளையார் சிலை ஒன்று சிலாபம் முன்னேஸ்வரம் தேவஸ்தானத்திலிருந்து காணாமற் போய்விட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணி அளவில் இந்தச் சிலை காணாமற் போனதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

சுமார் ஒன்றரை அடி உயரமான இந்த உற்சவமூர்த்தி பிள்ளையார் சிலை ஆலயத்தின் மேற்குப்புற வாசலுக்கு அருகில் உள்ள மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது.

அதிகாலை திருவனந்தல் பூசையின் பின்னர் காலை 7.00 மணிக்கு அடுத்த பூசை ஆரம்பமாவது வழக்கம்.

இரும்புக் கம்பிகளினாலான கதவு 7.00 மணிக்கு பூசை நேரம் மட்டும் திறக்கப்படும்.

கதவு திறக்கப்பட்டு சுமார் 15 நிமிட நேரத்துக்குள் இந்தச் சிலை காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மேற்கு நாடுகளிலும் மாவீரர் நாள் நிகழ்வு

கொழும்பு, நவ. 29

விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வுகள் மேற்கு நாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஜேர்மனியில் நடந்த மாவீரர் நாள் விழாவில், தமிழர் தேசியக்கட்சித் தலைவர் ப. நெடுமாறன் தமிழகத்திலிருந்து சென்று கலந்து கொண்டார்.

சுவிஸில் நடந்த விழாவில், தமிழகத்தில் இருந்து சென்ற பாட்டாளி மக்கள் கட்சி ஸ்தாபகர் டாக்டர் ராமதாஸ் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் ஓர் இலட்சம் சுவீஸ் பிராங் சேகரிக்கப்பட்டது.

இதே போன்று பிரிட்டன், டென்மார்க், கனடா, பிரான்ஸ், நோர்வே ஆகிய நாடுகளிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## 4 தமிழர்கள் புத்தளத்தில்கைது

கொழும்பு, புவ. 29

புத்தளம் நகரில் நேற்றுக் காலை பாதுகாப்புப் படையினர் தேடுதலை மேற்கொண்ட போது 4தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் புத்தளம் இரண்டாம் குறுக்குத் தெருவில் சக்தி வாய்ந்த 'வோக்கி டோக்கி' கருவிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது. (இ-ரி)

## ஆச்சிரம நிகழ்ச்சி

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் —

இன்று மு.ப. 10 மணிக்கு தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (அ-30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 2022 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29 - 11 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org